**20.09.2024**

**O.S.No. 54/2018**

**PW.1 - திருமதி. மகேஷ்வரி, க/பெ. வெங்கடசாமி**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 6–வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

6ம் பிரதிவாதி சரஸ்வதியை தெரியுமா என்றால் தெரியும். எவ்வளவு காலமாக தெரியும் என்றால் இவ்வழக்கு தாக்கல் செய்த போது தான் தெரிந்துக்கொண்டேன். அவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் அதுபற்றி தெரியாது. குப்பச்சிப்பாறைக்கும் நான் குடியிருக்கும் இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சரியாக சொல்ல தெரியவில்லை, பேருந்து மூலம் செல்ல வேண்டும் என்றால் 2 பஸ் நிறுத்தங்களை தாண்டி செல்ல வேண்டும். 2 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரியல்ல, நீதிமன்றம் குறிப்பாக நடந்து சென்றால் 1/2 மணி நேரம் ஆகுமா என்றால் சாட்சி 2 மணி நேரம் ஆகும் என்றார். என் தாயாருக்கும், சுப்பிரமணிக்கும் நடந்த திருமணம் ஊர்ஜிதத்தில் இருந்த போதே, சுப்பிரமணியை 1ம் பிரதிவாதி தேன்மொழியை 2வதாக திருமணம் செய்து கொண்டார் என என் நிரூபண பிரமாண வாக்குமூலம் மற்றும் வழக்குரையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி கூடுதலாக சுப்பிரமணியுடன் தேன்மொழி சேர்ந்து வாழ்ந்தார் என்றும், திருமணம் செய்து கொள்ளவில்லை என்றும் சொன்னார். நான் வழக்குரை மற்றும் நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பதற்கு மாறாக தற்போது சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சுப்பிரமணியும், தேன்மொழியும் சேர்ந்து வாழ்ந்ததை ஆட்சேபித்து என் தாயார் அவர்கள் மீது குற்ற நடவடிக்கைகள் ஏதும் எடுத்தார்களா என்றால் இல்லை. நான் சொன்ன மாதிரி என் தாயாருக்கும், சுப்பிரமணிக்கும் திருமணம் நடக்கவில்லை என்றும், அதனால் தான் என் தாயார் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சரஸ்வதி தாவா சொத்தை கிரயம் வாங்கியிருக்கும் விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் என் அப்பா சுப்பிரமணி இறந்த பிறகு தாவா சொத்தை பொறுத்து வில்லங்க சான்று விண்ணப்பித்து பெற்ற போது தெரிந்து கொண்டேன். 31.10.2007 அன்றே 6ம் பிரதிவாதி சரஸ்வதி தாவா சொத்தை சுப்பிரமணியிடமிருந்து கிரயம் வாங்கி கொண்டார் என தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். 2007ம் வருடம் கிரயம் கொடுத்ததில் இருந்தே தாவா சொத்தை சுப்பிரமணி அனுபவிக்கவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. என் அப்பா இறந்த பிறகு நான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் இல்லை. ஆகையினால் தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இருந்ததாக வழக்கு தாக்கல் செய்திருப்பது பொய்

என்றால் சரியல்ல. சாட்சி கூடுதலாக தான், தான் அந்த சொத்தில் இருந்தேன் என்றார். சரஸ்வதி கிரயம் வாங்கிய நிலத்தில் சுவாதீனத்தில் நான் இருந்ததற்கு ஆதரவாக எனக்கு பட்டா போன்ற ஆவணங்கள் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்ததாக சொல்லி, நான் பாகம் கோரியிருப்பது தவறு என்றும், நீதிமன்ற கட்டணமும் முறையாக செலுத்தவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் பேரில் சுப்பிரமணி, மைனர் சந்தோஷ் என்பவருக்கு ஒரு சொத்தை 26.02.2001 அன்று விற்றதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1–ன் படி கிரயம் பெற்ற சந்தோஷை நான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. குந்தப்பள்ளியில் சுப்பிரமணி பெயரில் இருக்கும் சர்வே எண். 44/3ஏ மற்றும் 44/2சி ஆகிய சொத்துக்களை இவ்வழக்கு தாவா சொத்துக்களாக சேர்க்கவில்லை என்றால் அதை என் சித்தப்பா வாங்கியிருப்பதால் சேர்க்கவில்லை. நீதிமன்றம் குறிப்பாக கேட்ட போது சித்தப்பா, தன் அப்பா சுப்பிரமணியிடம் வாங்கியதாகவும் அது அண்ணன் தம்பி சொத்து என்றும் அதனால் தான் சேர்க்கவில்லை என்றும் சொன்னார். நான் சொல்லும் சித்தப்பா பெயர் என்ன என்றால் நாகராஜ். நாகராஜ் எந்த வருடம் சுப்பிரமணியிடம் அந்த சொத்துக்களை வாங்கியிருக்கிறார் என்றால் தெரியவில்லை. நான் சொன்ன மாதிரி நாகராஜ் என்று யாரும் அந்த சொத்துக்களை சுப்பிரமணியிடமிருந்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. நாகராஜ் கிரயம் வாங்கியது குறித்த பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அந்த சொத்துக்களை இந்த வழக்கில் நான் சேர்க்கவே இல்லை. சுப்பிரமணி கிரயம் கொடுத்த சில சொத்துக்களையும், கிரயம் வாங்கிய நபர்களையும் நான் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்பதோடு, சுப்பிரமணி பெயரில் உள்ள மற்ற சில சொத்துக்களையும் வழக்கு சொத்துக்களாக சேர்க்கவில்லை என்பதால் அந்த வகையில் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சுப்பிரமணி உயிருடன் இருக்கும் வரையில் குடும்ப நிர்வாகத்தை பார்த்துக்கொண்டார் என்றால் தெரியவில்லை. சுப்பிரமணி இறக்கும் வரையிலும் குடும்ப தலைவராக இருந்து வீட்டை நிர்வாகம் செய்து வந்ததால், குடும்ப நலனிற்காக பொது குடும்ப சொத்துக்களையும் விற்பதற்கு அவருக்கு உரிமை உண்டு என்றால் அது பற்றி தெரியாது. சுப்பிரமணி சொத்துக்களை விற்றது குறித்து கேள்வி கேட்க எனக்கு உரிமை ஏதும் கிடையாது என்றால் சரியல்ல. சாட்சி கூடுதலாக தான் தான் சுப்பிரமணியின் முதல் மனைவியின் மகள் என்றும், தனக்கு திருமணத்தின் போது தன் தகப்பனார் எதுவும் செய்யவில்லை என்றும் சொன்னார். நான் சொன்ன மாதிரி என் தாயாருக்கும், சுப்பிரமணிக்கும் திருமணம் நடக்கவில்லை

என்றும், அந்த திருமண வாழ்வின் பயனாக நான் பிறக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சுப்பிரமணியின் சட்டபடியான வாரிசு இல்லை என்றால் சரியல்ல. ஊரில் சிலர் தூண்டியதின் பேரில் எனக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என பாரபட்சம் பார்த்து சில சொத்துக்களை இவ்வழக்கில் சேர்த்து சில நபர்களுக்கு எதிராக மட்டும் இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை சுப்பிரமணியிடம் கிரயம் பெற்ற 6ம் பிரதிவாதி சரஸ்வதியை பொறுத்து நான் கோரியிருக்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA

Digitally signed by M SUMATHI SAI PRIYA

Principal District Judge,
Krishnagiri.